# அதிவேக இணையதள சேவை அறிமுகம்

**பெங்களூரு, மே 13:** பெங்களூரில் அதிவேக இணையதள சேவை புதன்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

பெங்களூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏசிடி அதிவேக இணைய தள சேவையை அந்த நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் பாலா மல்லாடி அறிமுகப்படுத்தினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

தகவல் தொழில்நுட்பத் தலைநகரமான பெங்களூரில் இணைய தளச் சேவை இன்றியமையாததாக உள்ளது. ஆனால், பெரும்பாலான இணையதள சேவைகள் குறைந்த வேகத்தில் செயல்படுவதால் உரிய நேரத்தில் பணிகள் நிறைவுசெய்ய முடிவதில்லை. இதனால், ஏசிடி அதிவிரைவு (100 எம்பிபிஎஸ்) இணையதள சேவையை இலவசமாக அறிமுகம் செய்துள்ளோம்.

இந்த சேவை எங்களது பழைய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பொருந்தும். தேவை என்றால் மற்றவர்களுக்கு சலுகை கட்டணத்தில் இந்தச் சேவையை வழங்க முடிவு செய்துள்ளோம் என்றார்.